## சுருக்கம்

அரசுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படை பணிநியமனம் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – இராமநாதபுரம் மாவட்டம் – பணியில் இருக்கும் போது காலமான துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.(லேட்) செ.பாபு என்பவரின் மகன் திரு.பா.சாரதி இளநிலை உதவியாளர் / ஊர்நல அலுவலர் நிலை–II / காசாளர் நிலையில் பணி நியமனம் செய்தது – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ6) துறை

அரசாணை (4ப) எண்.10

நாள்: 08.03.2022
பிலவ, மாசி 24
திருவள்ளுவர் ஆண்டு 2053

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள்:23.01.2020.
2. இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறை ந.க.எண்.வி3/7537/2020, நாள்: 08.05.2020.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித ந.க.எண்.42044/2020/டி3, நாள் 30.03.2021 மற்றும் 05.08.2021.

-----

**ஆணை:**

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதத்தில், இராமநாதபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், போகலூர் ஊராட்சி ஒன்றியத்தில் துணை வட்டார வளர்ச்சி அலுவலராகப் பணிபுரிந்து 27.07.2019 அன்று பணியிடைக்காலமான திரு.(லேட்) செ.பாபு என்பவரின் வாரிசுதாரரும் மகனுமான திரு.பா.சாரதி என்பவருக்கு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறையின்படி கருணை அடிப்படையில், இராமநாதபுரம் மாவட்டத்தில் இளநிலை உதவியாளராகத் தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, அத்தனியர் 11.05.2020 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால், அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படி அரசுக்கு முன்மொழிவு அனுப்பியுள்ளார்.

2.மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தனது கடிதத்தில், பணியிடைக் காலமான திரு.(லேட்) செ.பாபு துணை வட்டார வளர்ச்சி அலுவலர் தனது தகுதிகாண் பருவத்தினை 05.03.2010 அன்று நிறைவு செய்துள்ளார் என்றும், அவரது மகன் திரு.பா.சாரதி கருணை அடிப்படையில் பணி நியமனம்

..2

வழங்கக் கோரி 27.01.2020 அன்று விண்ணப்பித்துள்ளார் என்றும், அவரது பிறந்த தேதி 28.03.2001 என்றும், தனியர் தனது இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் (10-ம் வகுப்பு) மார்ச் 2016 அன்று தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், தனியரின் குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்றும், பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 18 என்றும், தனியருக்கு பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை என்றும், அவரது குடும்பத்தில் எவரும் அரசு பணியில் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் முன்மொழிவு உரிய அசல் ஆவணங்களுடன் அரசால் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்படி, இளநிலை உதவியாளர் / ஊர்நல அலுவலர் நிலை-II / காசாளர் நிலையில் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.பா.சாரதி என்பவர் பணி நியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், இராமநாதபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் / ஊர்நல அலுவலர் நிலை-II / காசாளர் நிலையில் 11.05.2020 முற்பகல் முதல் தனியரின் பணியினை அவர் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு பணிவரன்முறை செய்யப்படுவதால் தனியர் ஆண்டு ஊதிய உயர்வு பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண்.3468/ட்டி1/2022, நாள் 23.02.2022 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண்.6557/ ஜி3/2022, நாள் 26.02.2022-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ.அமுதா
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை-15.
✓மாவட்ட ஆட்சித் தலைவர், இராமநாதபுரம் மாவட்டம்.
மாநிலக் கணக்காயர், சென்னை -18.
கருவூலங்கள் மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை-35.
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், இராமநாதபுரம் மாவட்டம்.

**நகல்:**

திரு.பா.சாரதி, இளநிலை உதவியாளர்,
ஊரக வளர்ச்சிப் பிரிவு, இராமநாதபுரம் மாவட்டம்.
(வழி: மாவட்ட ஆட்சித் தலைவர், இராமநாதபுரம் மாவட்டம்.)
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சே.சாந்தி 10/03/2022
பிரிவு அலுவலர்

6437
10/3/2022